முருகப்பெருமான் துணை

**மகான் மங்கையர்க்கரசியார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.08.2022, திங்கட்கிழமை

1. மனித சமூகம் சுதந்திரமாக
மனவளம் மனபலம் கண்டு தேற
கனிவேலவன் மகா சக்தியாக
கருணை கொண்டு அருளும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது நள்ளி திங்கள்
வரங்களென முப்பான் திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 30 நாள், 15.08.2022 திங்கட்கிழமை)
வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னையே மங்கையர்க்கரசியாரும்
தரணி பாதுகாப்புற உரைப்பேன்
மண்ணுலகம் சர்வ சுதந்திரமாக
மக்களின் வாழ்வுரிமை காக்கும் வண்ணம்
4. வண்ணமுடன் ஞானவான் தலைமை
வல்லமைபட கண்டு சிறக்க
எண்ணம் வழி தயவு பெருகி
இடர்தரா ஞான ஆட்சி மலரும்
5. மலருகின்ற துறைகள் அனைத்தும்
மக்களை பாதுகாக்கும் படியே
வளருகின்ற நிலைகள் கூடி
வையகம் அமைதி நிறைவும் காண்கும்
6. காண்கவே நல்லத் தலைமைகளை
கலியுக மக்கள் தேர்ந்தெடுக்க
ஆன்மீக ஞான வழிக்கு வந்து
அரங்கமகானின் ஆசி உபதேசம் ஏற்றிட
7. ஏற்றிட ஞானத் தெளிவும்
எவை நல்லவை என அறியும்
ஆற்றலும் பெருகி இனிதே
அகிலம் ஞானவான்கள் நிறைந்த
8. நிறைந்த ஞான பூமி ஆகியே
நிலவுலகம் எந்த சக்தியாலும்
குறைகள் அழிவுகள் பற்றா
குறிப்பாக ஆபத்து கலகம் அனுகா
9. அனுகா இயற்கை வளமுடன்
ஆளுமை பொது நலம்பட
ஞான ஆட்சியாக மாறும்
நாட்டிடுவேன் அரங்கமகானின்

10. மகானின் தருமமும் வளர்ந்திட
மண்ணுலகில் வறுமை பசிபிணி
வகையிலா வாட்டமும் இல்லாத
வளமான பூமியாக மாறும்

11. மாறுதல் தருகின்ற அரங்கனை
மக்கள் வணங்கி வருக
ஆறுமுகனார் ஆசி அருளுள்ள
ஆளுமைகள் உருவாகி பலம்பெறும்
அருளாசி முற்றே

–சுபம்–